அவர் பிறந்து வளர்ந்த மன்னார்குடியிலே கலையரங்கத்தைக் கட்டுவதற்கு அரசு பரிசீலனையில் அது இருக்கும் என்று நம்புகிறேன். அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் நாடகக் கலைமீது மிகுந்த ஆர்வம் கொண்டவர். எனக்குத் தெரிந்த வரையில் அவரே கூட நடிகராக இருந்திருக்கிறார் என்று கருதுகிறேன். ஆகவே அவருக்கு இருக்கிற ஆர்வம் அரசுக்கும் இருக்கிறது, காலஞ்சென்ற புகழ்மிக்க எம். ஜி. நடராஜப் பிள்ளை வாழ்ந்த மன்னார்குடியிலே இன்னும் அவரைப்போன்ற கலைஞர்கள் வ ழ்கின்ற, வாழ்ந்த மன்னார்குடியிலே அரங்கம் கட்டமுடியுமா என்பதைப்பற்றித் தலைநகரங்களிலே கட்டிவிட்டு அதற்குப் பிறகு அரசு பரிசீலிக்கும்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, மாவட்டப் பெருநகரங்களிலே நாடகக் கலையரங்கங்கள் கட்டுகிற நிலையிலே சென்னை நகரிலே உள்ள கலைவாணர் அரங்கத்திலே சில நாடகங்கள் நடத்த வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே ஆர். எஸ். மனோகர் நாடகம் மாதிரியான நாடகங்களைப் போடுவதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, கலைவாணர் அரங்கம் பல்வேறு பணிகளுக்கு உரிய விதத்திலே அங்கே அந்த மேடை அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஆர். எஸ். மனோகர் அவர்களுடைய நாடகத்தை நடத்துவதிலே மேடை அமைப்பிலே கொஞ்சம் பாதகங்கள் இருக்கின்றன. ஆனால் மற்ற நாடகங்கள் அந்த மேடையிலே நடந்து வருகின்றன. இதைத்தவிர வேறு பல அரசு நிகழ்ச்சிகள், விழாக்கள் எல்லாம் அந்த மேடையிலே நடத்துகிறபோது அந்த மேடை தோற்றத்தையே முழுவதும் அவ்வப்போது மாற்றியமைக்கக்கூடிய வகையிலே அது அமைக்கப்பட்டிருக்கிறது. ஆர். எஸ். மனோகர் அவர்களுடைய நாடகத்தை மாத்திரம் நடத்தமுடியாத ஒரு சூழ்நிலையில் கலைவாணர் அரங்கத்தினுடைய மேடையை இப்போது மாற்றும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கான சம்பள விகிதம்.

*வினா எண். 125—திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் கம்பெனிகளில் கொடுக்கப்படும் சம்பள அளவு தமிழக அரசின் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுகிறதா?

1981 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன் : இல்லை.

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய தனியார் கம்பெனிகளில் வேலை செய்யக்கூடிய தோட்டத் தொழிலாளர்களுக்கும் சர்க்கார் தேயிலைத் தோட்டத்திலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கும் ஒரே சீரான சம்பளம் இருக்கிறதா அல்லது குறைவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய விடையைத்தான் இல்லை என்று பதிலளித்து இருக்கிறேன். அதற்கான விபரத்தை மாண்புமிகு உறுப்பினர் கேட்டார்கள், நான் நீண்ட காலமாக அவைகள் லாப நோக்கத்தோடு, வியாபார நோக்கத்தோடு நடத்தப்பட்டு வருகிற தோட்டங்கள் ஆகும்.

ஆனால் அரசு இப்பொழுது நடத்திக்கொண்டிருக்கின்ற தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் என்பது 1976—ஆம் ஆண்டிலிருந்து இலங்கையிலிருந்து நம் நாட்டில் குடியமர்த்தப் படுகின்ற அந்த மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட தோட்டக் கழகமாகும். இந்த நான்கைந்தாண்டுக் காலங்களில் இன்னும் அந்தத் தோட்டக் கழகம் பெரிய இழப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. 1978-79—ஆம் ஆண்டில் 43.06 இலட்சம் நஷ்டமும், 1979-80-ஆம் ஆண்டில் 31.9 இலட்சமும் இழப்பு அடைந்துள்ளது. இந்தச் சூழ்நிலையிலேயும் பெரிய அளவில், பெருத்த வேறுபாடு தனியார் தோட்டத் தொழிலாளர்களுக்கும், அரசுத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் இருக்கக் கூடாது என்ற உணர்வைக் கொண்டுதான் கடந்த டிசம்பர் மாதத்தில் நமது தொழிலாளர் அமைச்சரவர்களும் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களும், தொழிலாளர் நலத் துறை அதிகாரிகளும் இணைந்து கூடி அறிவித்ததையொட்டி 7.16 காசாக இருந்த அந்த ஊதியத்தை 9.52 காசாக இப்பொழுது உயர்த்தியிருக்கிறோம். 20 இலட்சம் இதன் மூலம் இந்த ஆண்டு நம்முடைய இழப்பிலே அதிகமாகச் சேரும் என்று தெரிகிறது.

[முற்பகல் 9.20]

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அரசின் தேயிலைத் தோட்டக் கழகத்தினுடைய இலாப நஷ்டத்தைப் பற்றிச் சொல்லும்பொழுது பெரிய அளவிற்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஐந்தாண்டுகளாக நடக்கும் இந்த வேலையில் இலாபம் சம்பாதிக்கும் தோட்டங்கள் பல உண்டு. அது அமைச்சரவர்களுக்கே தெரியும் என்று நான் நினைக்கிறேன். அப்படியிருக்கும்பொழுது திரும்பத் திரும்ப புதிய புதிய ஏரியாக்களில் மூலதனம் அதிகம் செய்வதாக அதையும் காட்டி இழப்பு ஏற்படுகிறது என்று சொல்லி அதனால் குறைந்த பட்ச ஊதியம் தரப்படுவதாகச் சொல்லப்படுகிறது. தனியார்

தோட்டங்களாக இருந்தாலும், சர்க்கார் தோட்டங்களாக இருந்தாலும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஒரேமாதிரி ஊதியம் கொடுக்க வேண்டுமென்பதில் நியயம் இருக்கிறதா? இல்லையா? அதன்படி கொடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுடைய ஊதியங்கள் என்பது பல்வேறு வேலைகளில், பல்வேறு சூழ்நிலைகளில், பல்வேறு தரங்களிலே நிர்ணயிக்கப்படுகின்றன. அது தொழிற் சங்கத் தலைவர்களுக்குத் தெரியும். இருந்தாலும், அரசு பொறுப்பேற்றுக் கொண்டு இந்தத் தேயிலைத் தோட்டக் கழகத்தை உருவாக்குகின்றபொழுது ஆண்டுக்காண்டு இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற அந்த மக்களுக்காக நாம் தொழில் கொடுத்தாக வேண்டும்; குடியமர்த்தியாக வேண்டும். அவர்களுக்குத் தெரிந்த தொழில் தேயிலைத் தோட்டத் தொழில் என்பதால்தான் காடுகளிலேயும்கூட மிகுந்த கஷ்டத்தோடு தேயிலைத் தோட்டங்களாக மாற்றலாம் என்ற முயற்சியை மேற்கொண்டு மத்திய அரசின் உதவியோடு விஸ்தரித்துக் கொண்டு வருகிறோம். அப்படி விஸ்தரிக்கப்படவில்லை என்றால் இலங்கையிலிருந்து வரும் மக்களுக்கு நாம் வேலை கொடுக்க முடியாது. ஆகவே, விஸ்தரிப்பை நாம் கைவிட்டுவிட இயலாது. அதே நேரத்தில் ஐந்தாண்டுக் காலத்தில், இளந்தளிராக இருப்பவைகளுக்கு எந்த அளவிற்கு வருமானம் வரும் என்பதும் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே, முதலீட்டையும் ஏற்கனவே நடைபெற்று வரும் செலவுகளையும் மனத்தில் வைத்துத்தான் அரசு சில முடிவுகளை எடுக்கிறது. இருந்தாலும், இவ்வளவு இழப்பு இருந்தாலும்கூட பெரிய அளவிற்கு வித்தியாசம் இல்லாத அளவிற்கு நாம் கூலியை நிர்ணயித்திருக்கிறோம். தனியார் தோட்டங்களில் இப்பொழுது எடுத்திருக்கும் முடிவுப்படி கொடுப்பது ரூ. 10.70; நாம் ரூ. 9.52 கொடுத்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய முயற்சிகள் மேலும் மேலும் வளர்ந்து நல்ல நிலைமையை அடைகின்றபொழுது விரைவிலே தனியார் தோட்டத்திலே தருகின்ற அந்தக் கூலியைக் கொடுக்கின்ற அளவிற்கு நாம் எல்லோருமே சேர்ந்து முயற்சிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேவகோட்டையில் வனத்துறை சரக அலுவலகம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 126—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவகோட்டையில் வனத்துறை சரக அலுவலகம் திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது எப்போது தொடங்கப்படும்?